நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 649/2024

## P.W.1 –ன் வாக்குமூலம்

**( புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | வசந்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | குப்புசாமி |
| கிராமம் | : | ஓமலூர் டவுன் |
| வட்டம் | : | ஓமலூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 49 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 25–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**1 ம் எதிரி ஆஜரில் இல்லை. 2 ம் எதிரி ஆஜர். அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.00 PM)

1. சம்பவயிடத்தில் நான் இரவு 09.00 மணிவரை இருந்தேன். சம்பவயிடத்திற்கு உதவி ஆய்வாளர் உதயகுமார் உட்பட பெண் போலீசார் இருவர், ஆண் போலீசார் 3 நபர்கள் இருந்தனர். 2ம் எதிரி ஜீவானந்தம் எனது உடன்பிறந்த அண்ணன். 1ம்

எதிரி உதயபாரதி அண்ணன் மகன் ஆவார்.

2. 2006 ஆம் வருடம் எனது அண்ணன் ஜீவானந்தம் நங்கவள்ளி CPM கட்சியின் சார்பாக ஒன்றியக்குழு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. அந்த பதவியேற்க செல்லும்போது 50 க்கும் மேற்பட்ட போலீசார் இருந்தபோது நான் என் அண்ணன் வீட்டுக்கு சென்று பணம் கேட்டு தகராறு செய்தேன் என்றால் எனக்கும் எனது அண்ணனுக்கும் வரவுசெலவு இருந்தது. பணம் கேட்கபோனால் தகராறு செய்வார். குறிப்பாக மேற்படி நாளில் தகராறு ஏற்பட்டதா என்று எனக்கு நியாபகம் இல்லை.

3. மேற்படி 2006 ம் ஆண்டு நடைபெற்ற பிரச்சனை எவ்வளவு பணத்திற்காக என்று எனக்கு நியாபகம் இல்லை. அப்போது எனது தந்தை இறந்ததால் சுமூகமாக பேசி எனக்கு வரவேண்டிய பணத்தை வாங்கி கொடுத்துவிட்டார். ரூபாய் 1 இலட்சம், 2 இலட்சம் பணத்திற்கு தகராறு செய்த அண்ணனுக்கு எவ்வாறு ரூபாய் 25 இலட்சம் பணம் கொடுத்தேன் என்றால் எனது அண்ணன் என்ற பாசத்தில் கொடுத்தேன்.

4. 2020 ம் ஆண்டு எனது அண்ணனின் காசோலை என்னிடம் இருந்ததால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் உட்பட அனைவரும் உட்கார்ந்து பேசி பணத்தை திரும்ப பெற்று கொண்டேன் என்றால் இந்த வழக்கு சம்பவத்திற்கு பின்னிட்டு தான் பேசி ரூபாய் 20 இலட்சம் பெற்றுக்கொண்டேன். அதுப்போக எனது அண்ணன் பணம் கொடுக்கவில்லை.

5. எனக்கு எப்பொழுது பணம் தேவைப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் நான் எனது அண்ணன் வீட்டிற்கு சென்று தகராறு செய்வேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் தான் தனக்கு எப்போதெல்லாம் பணம் தேவைப்படுகிறதோ அப்போது என்னிடம் கெஞ்சி கூத்தாடி வாங்கிச்செல்வார். நானும் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தேன். தற்போது இல்லை.

6. நான் தான் சம்பவயிடத்திற்கு போனேன் என்றால் சரிதான். எனக்கு வரவேண்டிய பணத்தை கேட்பதற்காக போனேன். சம்பவயிடம் ஜீவானந்தம்

என்பவர் பேரில் தான் உள்ளது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு போகும்போது மாலை 04.30 மணியிருக்கும். இரவு சுமார் 09.00 வரை சம்பவயிடத்தில் தான் இருந்தேன். நான் சம்பவயிடத்தில் இருந்து கிளம்பும் வரை போலீசார் சம்பவயிடத்தில்தான் இருந்தார்கள்.

7. எதிரிகள் அனைவைரும் வீட்டைவிட்டு வெளியே சென்றுவிட்டார்களா என்றால் இல்லை. எதிரிகள் அனைவரும் வீட்டில்தான் இருந்தார்கள். சம்பவத்தின்போது எனது அண்ணன் தரப்பினரை நான் தாக்கியதாக வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் மேல்நடவடிக்கை கைவிடப்பட்டது.

8. 2013 ம் வருடம் இதேபோன்று என் அண்ணன் மீது புகார் அளித்து அதன்பிறகு சமாதானம் செய்துக்கொண்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கையும் சமாதானம் செய்துக்கொள்ள ரூபாய் 50 இலட்சம் பணம் கேட்டு மிரட்டுகிறேன் என்றால் சரியல்ல. எனது அண்ணனையும், அவரது மகனையும் நான் கடித்ததில் காயம் ஏற்பட்டு இருவரும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றார்கள் என்றால் சரியல்ல.

9. இதேபோன்ற ஒரு பிரச்சனையில் எனது மச்சான்டார் மீது ஓமலூர் காவல் நிலையத்தில் இதேபோன்றதொரு புகார் நான் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் சொன்னவாறு சம்பவம் நடந்திருந்தால் 04.30 மணியிலிருந்து 09.00 மணிவரை அங்கு இருந்திருக்க மாட்டேன் என்றாலும், உடனடியாக நான் மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றாலும் சரியல்ல.

10. சம்பவயிடத்தில் அவ்வளவு நேரம் நான் இருக்கவேண்டிய அவசியம் இல்லையன்றால் சரியல்ல. 08.00 மணிவரை பணம் கொடுத்தால்தான் போவேன் என்று உட்கார்ந்திருந்தேன். அதன்பிறகு தான் பிரச்சனை ஏற்பட்டு 1ம் எதிரி உதயபாரதி எனது செல்போனை புடுங்குவதற்காக எனது வலதுகை விரலை உடைத்தார்.

11. காவல் உதவி ஆய்வாளர் உதயகுமார் உட்பட 5 க்கும் மேற்பட்ட போலீசார்

சம்பவயிடத்தில் இருந்தபோது மேற்கண்டவாறு சம்பவம் நடந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது அண்ணனும், அவரது மகனும் குடிபோதையில் இருந்தார்கள்.

12. நான் சொல்வதெல்லாம் பொய் என்றால் சரியல்ல. எனது அண்ணனிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கத்தில் 3 வது முறையாக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 3 முறையும் பணம் வாங்கியதற்காகத்தான் பிரச்சனை ஏற்பட்டது. நான் கொடுத்த புகாரில் உண்மையில்லை என்றாலும், தொடர்ச்சியாக காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் புகார் கொடுத்துத்தான் இந்த வழக்கை பதிவுசெய்ய வைத்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-(12.30 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**